# உடன்பிறப்பே... 11

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்வோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த காஞ்சி மணிமொழியார் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# காஞ்சி மணிமொழியார்

## திராவிட இயக்கப் போர்வாள்



ஓவியம் : ரவிபேலட்

அது 1917-ஆம் ஆண்டு. காஞ்சிபுரத்தில் ஒரு மாபெரும் ஊர்வலம். அதில் நடுநாயகராக நீதிக் கட்சித் தலைவர் சர் பிட்டி.தியாகராயர் அவர்கள் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் அழைத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தார். பெரும் மக்கள் வெள்ளம். அவர்களது வாழ்த்துக் கோஷங்களையும் ஏற்றுக்கொண்டபடி சென்றுகொண்டிருந்த அந்தத் தலைவரைப் பார்த்து வியந்துகொண்டிருந்தார், பதினாறு வயது வாலிபர் ஒருவர்.

காஞ்சிபுரம், பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த அந்த வாலிபரின் உள்ளத்தில், அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய தியாகராயரின் பேச்சு புதிய எழுச்சியை உண்டாக்கியது. தியாகராயர் குறித்து, பலரிடமும் கேட்டு அறிந்தார்.

தாழ்த்தப்பட்டுக் கிடந்த திராவிட சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காக தியாகராயர் புரிந்துவரும் தொண்டின் வளர்ச்சிக்கு தானும் தன்னாலான பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்று சபதமேற்ற அந்த வாலிபர், அடுத்த சில நாட்களில் **‘சர் பிட்டி.தியாகராயர் வாசகசாலை’** ஒன்றையும், **‘பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம்’** ஒன்றையும் தொடங்கினார். அந்த வாலிபர்தான் பின்னாளில் **‘தமிழ்த் தொண்டர்’** என்று போற்றப்பட்ட காஞ்சி மணிமொழியார் ஆவார்.

### காஞ்சிபுரத்தின் கருத்துக் கருவூலம்

1900-ஆம் ஆண்டு, மே 7-ஆம் தேதி, பிரம்ம நகர் செங்கல்வராயர்-அரசலை அம்மையார் ஆகியோருக்கு எட்டாவது மகனாகப் பிறந்தார் மணிமொழியார். முதல் வகுப்பு முதல் எஸ்.எஸ்.எல்.சி. வரை பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் படித்தார். தமிழ்ப் பாடத்தில் சிறந்து விளங்கிய இவர், பள்ளியின் மாணவர் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகவும் இருந்தார்.

1917-ஆம் ஆண்டு தொடங்கி 1930-ஆம் ஆண்டு வரை, தான் தொடங்கிய வாசகசாலை மற்றும் வாலிபர் சங்கம் ஆகியவற்றின் செயலாளராக இருந்தார். அதே காலகட்டத்தில் ‘கச்சிக் கலாவல்லித் தமிழ்ச் சங்கம்’, ‘கச்சிக் கலாவல்லி நூற் குழுமம்’ ஆகிய இரண்டு அமைப்புகளையும் தொடங்கி, நடத்தி வந்தார். தமிழின் வளர்ச்சிக்காகவும், மக்களிடத்தில் தமிழ் நூல்கள் பயிலும் பழக்கத்தைப் பரப்புவதற்காகவும் அந்த அமைப்புகளை அவர் தொடங்கினார்.

குடும்பச்சூழல் காரணமாக, பள்ளிப் படிப்பை முடித்த கையோடு, தமது தந்தையார் நடத்தி வந்த ஜவுளி வியாபாரத்தைக் கவனிக்க வேண்டியிருந்தது. 1919 முதல் 1923 வரை அந்தக் கடையைச் சிறந்த முறையில் நடத்திய மணிமொழியார், 1922-ல் தொழில் வளர்ச்சிக்காக பர்மாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். 1924-ல் ஜவுளி வியாபாரத்தை நிறுத்தி விட்டு, வாலாஜாபாத் ‘இந்துமத பாடசாலை’யில் ஆசிரியப் பணி ஏற்றார். அங்கு 1927 -ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். பிறகு 1927 முதல் 1930 வரை காஞ்சிபுரம் பச்சையப்பன் கிளைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.

> ◆ தன் வாழ்நாளில் ‘செங்குந்த மித்திரன்’, ‘போர்வாள்’ போன்ற இதழ்களை நடத்தியுள்ளார் மணிமொழியார். பேரறிஞர் அண்ணாவைச் சிறந்த எழுத்தாளராகவும் காட்டியது இவர் தொடங்கிய ‘நவயுகம்’ இதழே.
>
> ◆ இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது, சுவாமி அருணகிரிநாதரின் ‘தமிழ்த்தாய் புலம்பல்’ எனும் நூலை மணிமொழியார் தனது அச்சகத்தில் அச்சிட்டுத் தந்தார்.
>
> ◆ அண்ணாவின் ‘வழக்கு வாபஸ் (1951)’, ‘வாழ்க்கைப் புயல் (1952)’ ஆகிய நாடகங்களில் மணிமொழியார் நடித்துள்ளார்.

### சமுதாயத் தொண்டும் இயக்கப் பணியும்

வாலாஜாபாத்தில் பணியாற்றியபோது, சுற்றுப்புற கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள மக்களிடையே கல்வியின் அருமையை எடுத்துக்கூறி, அவர்களது பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பி வைக்க முயற்சிகள் மேற்கொண்டார். பச்சையப்பன் கிளைப் பள்ளியில் பணியாற்றியபோது, பார்ப்பன ஆசிரியர்கள் மட்டும் உண்பதற்குத் தனி அறை, பார்ப்பன மாணவர்கள் மட்டும் அருந்துவதற்கான தனி நீர்ப் பானை போன்று அங்கு நிலவிய சாதிய வேற்றுமைகளை எதிர்த்து, அந்த நடைமுறைகளை ஒழித்தார். மேலும், பள்ளி நூலகத்துக்கு **‘தி இந்து’** இதழ் மட்டுமே வாங்கப்பட்டு வந்த நடைமுறையை மாற்றி, நீதிக்கட்சியின் ‘ஜஸ்டிஸ்’ இதழை வாங்கச் செய்தார். தாழ்த்தப்பட்ட சமூக ஆசிரியர்களை நியமிக்கவும் அவர் நடவடிக்கை மேற்கொண்டார்.

ஆசிரியராகப் பணியிலிருந்தபோதும், திராவிட இயக்கப் பணிகளில் தன்னை வெகுவாக ஈடுபடுத்திக் கொண்டார். மணிமொழியார் தலைமையில் பொதுக்கூட்டம் நடத்தினால், எந்த அசம்பாவிதங்களும் நடக்காது என்கிற அளவுக்கு, பொதுக்கூட்டங்கள் நடத்துவதிலும், மக்களின் மனங்கவரும்படி உரை நிகழ்த்துவதிலும் சிறந்து விளங்கினார் அவர். 1930-களிலிருந்தே ஏராளமான சுயமரியாதைத் திருமணங்களுக்குத் தலைமை தாங்கிய மணிமொழியார், அவற்றில் பல திருமணங்களை, ராகு காலத்தில் நடத்தி வைத்து மூடநம்பிக்கைகளை ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்.

மேலும், 1938-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்கியபோது, தான் குடியிருந்த சென்னை, பவழக்காரத் தெரு, 147 ஆம் எண் வீட்டின்முன் இருந்து, மாபெரும் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தினார். சென்னையில் நடைபெற்ற, **‘முதல் இந்தி எதிர்ப்பு ஊர்வலம்’** அதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் காலத்தில்தான் **‘மாணிக்கவாசகம்’** என்ற தனது இயற்பெயரை, **‘மணிமொழியார்’** என்று மாற்றிக்கொண்டார். **‘நீதிக்கட்சி’**, 1944-ஆம் ஆண்டில் திராவிடர் இயக்கமானபோது, அதிலும் பணியாற்றினார் மணிமொழியார். தொடர்ந்து 1948-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு இரண்டு முறை சிறை சென்றார்.

### தி.மு.க.வின் முதல் தளபதி

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த அதன் தலைவர்களில் ஒருவராகிய மணிமொழியார், கழகம் தொடங்கப்பட்ட 1949-ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகள் அதன் தலைமைக் கழக நிதிக் குழுச் செயலாளராக இருந்தார். 1951-ஆம் ஆண்டு டிசம்பர் 13 முதல் 16 வரை நடந்த தி.மு.க. முதல் மாநில மாநாட்டின் செயலாளராக இருந்து, மாபெரும் மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்.

மேலும் அவர், தி.மு.க.வின் முதல் சட்ட திட்டக் குழுவில் உறுப்பினராகவும், தலைமைப் பொதுக்குழுவின் உறுப்பினராகவும், சென்னை மாவட்ட தி.மு.க.வின் முத்தியால்பேட்டை கிளைப் பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

தி.மு.கழகக் கிளைகளின் விவரங்கள், குறிப்புகள், சொற்பொழிவாளர்களின் முகவரி போன்றவற்றுக்கு தொகுப்புகளை உருவாக்கி, **‘திராவிடர் நாட்குறிப்பு’** எனும் பெயரால் ஆண்டுதோறும் **‘டைரி’** ஒன்றை கழகத்துக்கு அளித்து வந்தது, மணிமொழியாரின் முக்கியப் பங்களிப்புகளில் ஒன்று. தவிர, திராவிட இயக்கத்தின் வளர்ச்சி காரணமாகத் தொடங்கப்பட்ட பல பத்திரிகைகளையும் ஒன்று சேர்த்து, **‘திராவிட பத்திரிகாசிரியர்கள் சங்கம்’** என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி, இயக்கப் பத்திரிகைத் துறையின் மேம்பாட்டுக்காகப் பாடுபட்டார்.

> **“சின்ன உருவமும், சன்னமான குரலும், பொன்னான நெஞ்சும், மின்னும் விழிகளும் படைத்தவராய், துடிப்புமிகு நடையும், துவளாச் சுறுசுறுப்பும், தொண்டாற்றும் ஆர்வமும், தியாக மனப்பாங்கும் ஒருங்கே ஒருருவாய்த் திகழ்ந்தவர்”**

“சின்ன உருவமும், சன்னமான குரலும், பொன்னான நெஞ்சும், மின்னும் விழிகளும் படைத்தவராய், துடிப்புமிகு நடையும், துவளாச் சுறுசுறுப்பும், தொண்டாற்றும் ஆர்வமும், தியாக மனப்பாங்கும் ஒருங்கே ஒருருவாய்த் திகழ்ந்தவர்” என்று முத்தமிழறிஞர் கலைஞரால் போற்றப்பட்ட மணிமொழியார், 1972-ஆம் ஆண்டு, ஜூன் 7-ஆம் தேதி காலமானார். அவரது கழகப் பணிகள் வழியே நாம் அவரை நினைவுகூர்வோம்.

**(துடிக்கும்...)**

## திராவிட வள்ளலார்!



சனாதனத்தை எதிர்த்து தனிமார்க்கத்தை உருவாக்கியவர் வள்ளலார். அந்த வகையில் தமிழ்நாட்டில், சமூக சீர்திருத்தக் கருத்துகளில் பெரியாரின் முன்னோடி. மதங்களை மறுதலித்து அன்பையும் கருணையையும் முன்னிறுத்திய தனிப்பெரும் மெய்யியல் அறிஞர் வள்ளல் பெருமானின் 200-வது ஆண்டு இது. இந்த வரலாற்றுச் சிறப்பைச் சிதைக்க முனைகின்றன, சனாதனிகளின் புரட்டுகள்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் நமது முதலமைச்சர் அவர்கள் வள்ளல் பெருமானின் பிறந்த நாளை ‘தனிப்பெருங்கருணை’ தினமாக அரசு கொண்டாடும் என அறிவித்தார். வள்ளலாரின் 200-வது பிறந்தநாளை முன்னிட்டு அக்டோபர் 2022 தொடங்கி, அக்டோபர் 2023 வரை நிகழ்வுகள் நடக்கும் என்றும் அறிவித்தார். இலச்சினையும் தபால் தலையும் வெளியிட்டார்.

**“சாதியும்,மதமும்,சமயமும் தவிர்த்தேன்**
**சாத்திரக் குப்பையும் தவிர்த்தேன்!”** என்கிற வள்ளலாரின் சத்திய ஞான சபை மதச்சாயல் அற்றது. சடங்குகள் அற்றது. வள்ளலாரின் ஆறாம் திருமுறை தமிழின் முக்கியமான மெய்யியல் ஆவணம். வள்ளலாரின் சமூகச் சீர்திருத்த, மூடநம்பிக்கை எதிர்ப்பு மற்றும் மதங்களை மறுதலித்தல் ஆகியவை தெரிந்தும் பொய்யும், புரட்டும் கலையாகக் கொண்ட சனாதனிகள் அவரை அடைய நினைக்கின்றனர். ஒட்டுண்ணி அரசியல் செய்வதை தமிழ்நாடு அனுமதிக்காது.

## :ப்ளாஷ்பேக்





### மும்பையில் கழகம்!



ஜேசு பீட்டர்

மும்பை பகுதியில் கழக வெள்ளி விழாவைக் கொண்டாட, என் தந்தை ஆன்டனி, தலைவர் கலைஞருக்கு அழைப்பு விடுக்கச் சென்னை வந்திருக்கிறார். அப்போது முதலமைச்சராக சில பணிகள் இருப்பதைக் குறிப்பிட்டு, “தம்பி ஸ்டாலினை அழைத்துக்கொண்டு செல்லுங்கள்” என்று உடன் மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் கவிஞர் முடியரசு, தஞ்சை முத்தரசன், திருவை அண்ணாமலை ஆகியோரை அனுப்பி வைத்தார். இன்றைய முதலமைச்சரும் கழகத் தலைவரும் மும்பை பகுதிக்கு, கழகம் வளர்க்க, வருகைதந்து சிறப்புரையாற்றினார். அப்போது அவருடன் என் தந்தை எடுத்துக் கொண்ட புகைப்படம் இது.

**-ஜேசு பீட்டர், கழகத் தொண்டர், தென்காசி மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033 –24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### நில உச்சவரம்பு

**1957-ஆம் ஆண்டு தேர்தலில் குளித்தலையிலிருந்து தேர்வானார் கலைஞர். பின்தங்கிய விவசாயப் பகுதியான அங்கு, விவசாயிகளுக்கும் நிலச்சுவான்தாரர்களுக்கும் நீடித்த பிரச்சினை குறித்த தனது முதல் சட்டமன்ற உரையை நிகழ்த்தினார். கலைஞரின் ‘கன்னிப் பேச்சு’, கண்ணீர் பேச்சாக அமைந்தது. அதற்கு அடுத்து இரண்டு நாட்களுக்குப் பின்னர் முதன்முதலாக சட்டமன்றத்தில் உரையாற்றினார் பேரறிஞர் அண்ணா. அவரது பேச்சும், நிலச் சீர்திருத்தத்தை வலியுறுத்தியது. இருவரின் பேச்சும் மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 158




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.